பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 13 புதன்கிழமை 28.12.2022 கதிர் 304

## புதிய அமைச்சர்கள் நியமனம் ஜன. 15 வரை சாத்தியமில்லை

வரவு – செலவுத் திட்டம் முடிந்தும் புதிய அமைச்சர்கள் நியமனம் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றே தகவல்கள் தெரிவிக்கின்றன. எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதி வரை புதிய அமைச்சர்கள் நியமனம் சாத்தியமில்லை என்று ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

8



## அமைச்சுப் பதவியை பொறுப்பேற்கமாட்டேன்

நாமல் மீண்டும் விளாசல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இந்த அரசில் எந்த அமைச்சுப் பதவியையும் நான் பொறுப்பேற்கமாட்டேன்.

– இவ்வாறு முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

2

# தமிழ் அரசியல் கைதிகளை உடன் விடுவிக்க வேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வலியுறுத்து

சிறைச்சாலைகளில் தற்போது உள்ள 31 தமிழ் அரசியல் கைதிகளும் விரைவில் விடுதலைசெய்யப்படவேண்டும்.

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துடன் நான் உடன்படுகின்றேன். காணி விவகாரமும், அரசியல் கைதிகள் விடயமும் அவற்றில் முக்கியம் பெறுகின்றன.

சிறைகளில் தற்போது தமிழ் அரசியல் கைதிகள் 31 பேர் உள்ளனர் என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அவற்றில் குற்றம் நிரூபிக்கப்பட்ட 15 பேரையும் பாதிக்கப்பட்ட தரப்புக்களுடன் பேசி பொதுமன்னிப்பில் ஜனாதிபதியால் விரைவாக விடுவிக்க முடியும்.

2



# யாரை வேண்டுமானாலும் அமைச்சராக நியமியுங்கள்



## நான் தலையிட மாட்டேன் என்று ரணிலிடம் மஹிந்த தெரிவிப்பு

புதிய அமைச்சரவை நியமனம் பற்றி நான் எதுவும் பேச மாட்டேன்; தலையிடவும் மாட்டேன்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நேரில் தெரிவித்தார் முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ.

2

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் களமிறங்கி

## கொழும்பின் அதிகாரத்தை நிச்சயம் கைப்பற்றுவோம்

காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் சூளுரை



ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்த காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள், அடுத்த தேர்தலில் போட்டியிடுவார்கள்.

– இவ்வாறு 'கோட்டா கோ ஹோம்

2

## வேடுவர்களும் போட்டியிட முடிவு



உள்ளூராட்சிசபைத்தேர்தல் நடத்தப்பட்டால் வேடுவர் இனத்தவர்களும் களமிறங்கத் தீர்மானித்துள்ளனர்.

தமது இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திவேட்பாளர்களைத் தெரிவு செய்யுமாறு வேடுவர் இனத் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ அந்தந்த மாவட்டங்களில்உள்ள வேடுவர் இனத்தலைவர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

அதன்படி,

2

## கூட்டமைப்பினர் தமிழரின் ஏகப் பிரதிநிதிகள் அல்லர்

கம்மன்பில கண்டுபிடிப்பு



அரசமைப்பு பேரவையூடாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அதிகாரப் பகிர்வை அணுகுவர் என்பதாலேயே, கூட்டமைப்பினரது பெயர் பரிந்துரையை எதிர்த்தோம். கூட்டமைப்பினர்

2

## காணாமல்போயிருந்த மன்னார் மீனவர்கள் இருவரும் 4 நாள்களின் பின் கண்டுபிடிப்பு

(ந.லோகதயாளன்)

மன்னார், முசலி – சிலாவத்துறை கடற்கரையிலிருந்து மீன்பிடிக்கச் சென்று 4 நாட்களாகக் காணாமல்போயிருந்த இரண்டு மீனவர்கள் கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டனர்.

சிலாவத்துறை, காயக்குளி பகுதியைச் சேர்ந்த 19 மற்றும் 23 வயதுடைய மீனவர்கள் இருவர், கடந்த 23ஆம் திகதி சிலாவத்துறை பகுதியிலிருந்து கடலுக்கு மீன்பிடிக்கச்

2

## பதுளையில் கோர விபத்து; 7 வயது சிறுமி உயிரிழப்பு!

மூவர் காயங்களுடன் வைத்தியசாலையில்



பதுளை – கஹட்டருப்ப, அம்பிட்டிய சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஓட்டோவில் பயணித்த 7 வயது சிறுமிஒருவர்உயிரிழந்துள்ளார்.

2

## 'மொட்டு'ச் சின்னத்தில்தான் போட்டி

உள்ளூராட்சி உறுப்பினர்களிடம் பஸில் உறுதி



உள்ளூராட்சி சபைத் தேர்தல் இடம்பெற்றால் – அதில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து போட்டியிட்டால் 'மொட்டு'ச் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும்.

– இவ்வாறு மொட்டுக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள்,

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## 'மொட்டுச்' ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்சியின் தேசிய அமைப்பாளரான பஸில் ராஜபக்சவிடம் வலியுறுத்தியுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தின் கீழோ அல்லது வேறு ஏதேனும் பொதுச் சின்னத்தின் கீழோ போட்டியிட்டால் வெற்றி பெறுவது கஷ் டம் என்று அவர்கள் மேலும் கூறியுள்ளனர்.

மொட்டுக் கட்சியின் உள்ளூராட்சி சபை பிரதிநிதிகளைப் பத்திரமுல்லை காரியாலயத்துக்கு அழைத்து இது தொடர்பில் பஸில் பேசினார். அப்போதே அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்தனர் என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிராம மட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரிதாக ஆதரவு இல்லை. அக்கட்சியுடன் மொட்டுக் கட்சி சேர்ந்து போட்டியிடுவதால் தமக்கு வரவிருக்கின்ற வாக்குகள் குறைவதற்கும் தமது கட்சி உறுப்பினர்கள் வேறு பக்கம் தாவுவதற்கும் வாய்ப்புகள் உண்டு என்றும் அவர்கள் கூறினர்.

'மொட்டு'ச் சின்னத்தில் போட்டியிட்டால் மாத்திரமே இந்தப் பிரச்சினையில் இருந்து தப்பலாம் என்று அவர்கள் ஆலோசனை தெரிவித்தனர். பயப்பட வேண்டாம், மொட்டுச் சின் னத்தில்தான் போட்டி என்று அவர்களுக்குப் பஸில் உறுதியளித்தார் என்றும் அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கொழும்பின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்களில் ஒருவரான தனிஷ் அலி தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கொழும்பு மாநகர சபைக்குப் போட்டியிடவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பின் அதிகாரத்தைத் தமது அணி நிச்சயம் கைப்பற்றும் என்றும் அவர் சூளுரைத்தார்.

## வேடுவர்களும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அம்பாறை, வாகரைபொல்பெத்த போன்ற இடங்களில் உள்ள வேடுவர் இனத்தில் இருந்து வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.

கடந்த காலங்களில் தமது இனத்தின் பிரச்சினைகள் பல தீர்க்கப்படவில்லை என்று வேடுவர் இனத் தலைவர் ஊருவரிகே வன்னியலத்தோ ஊடகங்களிடம் தெரிவித்தார்.

## கூட்டமைப்பினர்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஒட்டுமொத்த தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அல்லர்.

– இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசமைப்பின் 21 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு இரு மாதங்கள் நிறைவுற்றுள்ளன. எனினும், அரசமைப்பு பேரவைக்கான உறுப்பினர் நியமனம் இன்னும் இழுபறியிலேயே உள்ளது. உறுப்பினர் நியமனத்தில் அரசியல் கட்சிகளுக்கிடையில் கருத்தொற்றுமை கிடையாது.

பெரும்பான்மைவாதத்தைத் தக்க வைத்துக்கொள்ளவும், சிறுபான்மையினத்தவர்களுக்கு இடமளிக்கக்கூடாது என்பதற்காகவுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் பெயர் பரிந்துரையை, நாம் எதிர்த்ததாகக் கூறுவது அடிப்படையற்றது. அரசமைப்பு பேர வைக்கு சுயாதீன தரப்பினர் ஒருவரின் பெயரைப் பரிந்துரைக்க நாங்கள் ஆரம்பத்தில் தீர்மானிக்கவில்லை – என்றார்.

## காணாமல் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சென்றுள்ளனர். இருவரும் மீண்டும் கரைக்கு திரும்பாததால் அவர்களது உறவினர்கள் இது குறித்து சிலாவத்துறைப் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

பின்னர் பொலிஸார் ஊடாகக் கடற்படையினருக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டது.

காணாமல்போன மீனவர்களைத் தேடும் பணியை மேற்கொண்ட கடற்படையினர், புத்தளம் கல்பிட்டி கடற்பகுதியில் மீன்பிடிப் படகு ஒன்றில் மிதந்து கொண்டிருந்த இரு மீனவர்க ளையும் நேற்று மீட்டனர்.

மீன்பிடிக்கச் சென்றபோது, இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் அதை இயக்க முடியாமல் இரண்டு நாட்களுக்கும் மேலாக கடலில் மிதப்பதாக மீனவர்கள் இருவரும் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், குறித்த மீனவர்கள் இருவரும் தற்போது நலமுடன் இருக்கின்றனர் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

## பதுளையில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கஹட்டருப்ப பிரதேசத்திலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றும், அம்பிட்டியவில் இருந்து முத்துமால பகுதிக்குச் சென்று கொண்டிருந்த ஓட்டோ ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த 7 வயது சிறுமி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார் எனவும்,அவரது தாய் உட்பட மூவர் காயங்களுடன் பதுளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்த சிறுமியின் தாயே ஓட்டோவைச் செலுத்திச் சென்றுள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்ஸின் சாரதியைக் கைது செய்த கஹட்டருப்ப பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## தமிழ் அரசியல்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குற்றஞ்சாட்ட ஏனைய 16 பேர் மீதான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தி அவர்களையும் ஏதோவொரு வழியில் விரைந்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய நாம் எந்த எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்த மாட்டோம் – என்றார்.

## அமைச்சுப்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்கும் எந்தவித முரண்பாடும் இல்லை. ரணில் பழுத்த அரசியல்வாதி. சிறந்த தலைவர். எனினும், அவர் தலைமையிலான தற்போதைய அரசில் அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்க நான் தயார் இல்லை. எனக்கு அமைச்சுப் பதவி கிடைக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடம் எவரும் முரண்படவும் தேவையில்லை – என்றார்.

## யாரை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரணிலுக்கு மஹிந்தவுக்கும் இடையில் கடந்த வாரம் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இருவரும் தற்போதைய அரசியல், பொருளாதார விடங்கள் பற்றிப் பேசினர்.

அப்போது புதிய அமைச்சரவை நியமனம் பற்றியும் பேசப்பட்டது.

புதிய அமைச்சரவை நியமனம் பற்றி நான் எதுவும் பேசமாட்டேன்; தலையிடவும் மாட்டேன். நீங்கள் யாரை வேண்டுமானாலும் நியமியுங்கள் – என்று கூறினார் மஹிந்த.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எதிலும் இனவாதம்

இலங்கையின் தேசிய இனப் பிரச்சுனை தீர்க்கப் படாமல் ஏழரை தசாப்தங்களுக்கு மேலாக நீடிப்பதற்கு பிரதான காரணம் ஒன்றுதான்.

அது – தென்னிலங்கை பௌத்த, சிங்களப் பேரினவாதக் கட்சிகள், தங்கள் பதவி ஆசைக்கான அதிகாரப் போட்டிகளுக்கு இனவாதத்தைக் கையில் எடுப்பதுதான். இதுதான் இந்த நாட்டில் காலம் காலமாக நடந்து வரும் சீரழிவு நிலைமை.

இப்போதும் கூட அந்தப் போக்கு மாறிவிடவில்லை.

அரசமைப்பின் 21ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டு இரண்டு மாதங்கள் நிறைவுறுகின்றன. எனினும் அதன் கீழான அரசமைப்பு கவுன்ஸிலுக்கு உறுப்பி னர்கள் நியமனம் இன்னும் பூர்த்தியாகாமல் இழுபறி நிலையில் நீடிக்கின்றது.

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் ஆளும் கட்சியின் பொதுஜன பெரமுன கூட்டணியில் – மொட்டுக் கூட்டமைப்பில் – வெற்றி பெற்று நாடாளு மன்றுக்கு வந்த உதய கமன்பில்ல, விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார போன்ற தரப்பினர் இப்போது அரசு தரப்பில் இருந்து பிரிந்து தனிக்குழுக்களாக தாங்கள் இயங்குகின்றனர் என அறிவித்துள்ளனர்.

ஆனால் அவர்களுக்குத் தனி குழு அல்லது கட்சி அங்கீகாரத்தை இன்னும் சபாநாயகர் வழங்கவில் லை; வழங்கவும் முடியாது.

சபாநாயகரை பொறுத்தவரை அவர்கள் மொட்டு கட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள். அவ்வளவுதான்.

ஆனால் அத்தரப்பினர் தங்களுக்கு அந்தத் தனிக்கட்சி அங்கீகாரத்தை பறித்து எடுப்பதற்காக அவ்விவகாரத்தையும் இனவாத அரசியலுடன் முடிச்சு போட முயற்சிக்கின்றனர்.

அரசமைப்புக் கவுன்ஸிலுக்கு நியமிக்கப்படும் ஏழாவது உறுப்பினர் பிரதமரினதோ அல்லது எதிர்க்கட்சித் தலைவரினதோ கட்சியை அல்லது அணியை சாராத மற்றைய கட்சியைச் சார்ந்தவராக இருக்க வேண்டும் என்பது விதி.

அதன்படி நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு – அது தேர்ந்துள்ள உறுப்பினர் சித்தார்த்தனுக்கு – அந்தப் பதவி வழங்கப்பட வேண்டும்.

சபாநாயகரையுன் நாடாளுமன்றையும் பொறுத் தவரை, மொட்டுக்கட்சிக் கூட்டணியைச் சேர்ந்தோர், அவர்கள் கூட்டணியில் இருந்து வெளியேறி, தனிக்குழுவாக இயங்குகின்றனர் என தெரிந்தாலும், அவர்கள் மொட்டுக் கட்சிக் கூட்டைச் சேர்ந்தவர்களா கவே கணிக்கப்பட வேண்டும்.

ஆனால் மூன்றாவது பெரிய கட்சியின் பிரதிநிதி யை தெரிவு செய்யும் கூட்டத்துக்கு இந்த அதிருப்தி யாளர் குழுவையும் அழைத்து, நிலைமையைக் குழப்பியுள்ளார் சபாநாயகர்.

அவர்களும், அரசமைப்புக் கவுன்ஸில் பிரதி நிதித்துவத்தை தமிழர் தரப்புக்கு கிட்ட விடாமல் தடுப்பதற்காக அந்த நியமனத்தை இனவாதத்துடன் முடிச்சு போட்டுப் பேசுகின்றார்கள். அதன் மூலம் தங்களின் தனிக் கட்சி அங்கீகாரத்தை நிலைநாட்ட முயற்சிக்கின்றனர்.

சபாநாயகர் இது விடயத்தில் நீதியை நிலைநாட்ட தவறுவாரானால், இந்த ஏழாவது உறுப்பினர் நியம னம் சிறுபான்மையினருக்கு கிட்டக்கூடாது என்ற பேரினவாதத் தரப்பின் இனவாத சிந்தனை நிலைநாட்டப்படுவதற்கு துணைபோனவராவார்.

# அனைத்து மத ஸ்தலங்களுக்கும் சூரிய சக்தி கலன்கள் வழங்கப்படும்!

## அமைச்சர் காஞ்சன உத்தரவாதம்



இந்திய கடனுதவித் திட்டத்தின் கீழ் அனைத்து மத தலங்களுக்கும் மூன்று மாத காலத்துக்குள் 05 கிலோவாட் சூரிய சக்தி கலன்கள் இலவசமாக வழங்கப்படும் என மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரி வித்தார்.

மின்சாரத்துறை மற்றும் வலுசக்தி அமைச்சில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வரு மாறு –

மின்கட்டண அதிகரிப்பால் பௌத்த விகாரைகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளன எனவும், பௌத்த மத செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் ஒருசில பிக்குகள் தொடர்ந்து குற்றச்சாட்டுக் களை முன்வைத்து வருகிறார்கள்.

மின்கட்டண அதிகரிப்பில் எவ்வித வேறுபாடுகளும் பார்க்க முடியாது. மத தலங்கள் உட்பட அனைத்து கட்டமைப்புகளையும் உள்ளடக்கிய வகையில் மின் கட்டணம் அதி கரிக்கப்பட்டுள்ளது. மின்கட்டண அதிகரிப்பால் மத தலங்கள் மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக் களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஒருபோதும் மறுக்கவில்லை.

மின்கட்டணத்தை அதிகரிக்காவிட்டால் மின்கட்டமைப்பை சீராக முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பதை விமர்சனங்களை முன்வைப்பவர்கள் விளங்கிக்கொள்ள வேண் டும். மின்கட்டண அதிகரிப்பில் இருந்து மீள வேண்டுமாயின் புதுப்பிக்கத்தக்க சக்தி வள பாவனை விரிவுபடுத்தப்பட வேண்டும்.

இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் அனைத்து மத தலங்களுக்கும் 05 கிலோவாட் சூரிய சக்தி கலன்கள் இலவசமாக வழங்கப்படும். இந்த செயற்திட்டம் இன்னும் மூன்று மாத காலத்தி ற்குள் செயற்படுத்தப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றதும் புதுப்பிக்கத்தக்க சக்தி வள பயன்பாட்டுக்கான உபகரணங்கள் குறைந்த வட்டி வீதத்தின் கடனடிப்படையில் விநியோகிக்கப்படும். எரிபொருள் மற்றும் நிலக்கரி ஊடாக மின்பாவனையைத் தவிர்த்து மாற்றுத் திட்டங்களை செயற்படுத்த விசேட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

# திரிபோஷாவை தடையின்றி வழங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து!

பாலூட்டும் தாய்மார் , கர்ப்பிணி தாய்மார் மற்றும் நிறை குறைவான குழந்தைகளுக் குத் தேவையான திரிபோஷாவைத் தடையின்றி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் தென் ஆசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனம் மற் றும் சுகாதார அமைச்சுக்கிடையில் விசேட புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கையெ ழுத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் குறித்த நிறுவனத் தால் ஒரு வருட காலத்துக்கான திரிபோஷா உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் வழங்கப்படும்.

இது அந்த நிறுவனத்தின் நிவாரணமாக வழங்கப்படுவதோடு , இதற்காக 1850 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கும் எதிர்பார்க்கப்படு கிறது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் , தென் ஆசிய கேட்வே டேர்மினல்ஸ் நிறுவனத்தி ன் நிறைவேற்றதிகாரி ரொமேஷ் டேவிட், சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த மற்றும் திரிபோ நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன ஆகியோர் ஒப்பந்தத் தில் கையெழுத்திட்டுள்ளனர்.

எடை குறைவான குழந்தைகளுக்காக திரிபோஷா வழங்கும் ஒரேயொரு நாடாக இலங்கை மாத்திரமே காணப்படுகிறது. கர்பிணிகள் , பாலூட்டும் தாய்மார் மற்றும் குழந்தைகளுக்காக மாதமொன்றுக்கு சுமார் ஒரு லட்சம் திரிபோஷா பக்கெட்டுக்கள் விநி யோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக் கது.

# யானை, மொட்டு மற்றும் தொலைபேசியுடன் என்றும் கூட்டணி அமைக்கப் போவதில்லை!

## ஜயந்த சமரவீர திட்டவட்டம்



யானை, மொட்டு மற்றும் தொலைபேசி யுடன் கூட்டணி அமைக்க போவதில்லை. ஏனைய அரசியல் தரப்பினருடன் கூட்டணிய மைக்க ஆரம்பக்கட்ட பேச்சுகளை முன் னெடுத்துள்ளோம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிச கட்சி காரியாலயத்தில் இலங்கை மேலவை கூட்டணியின் உறுப்பினர்களுக்கு இடையிலான பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூட்ட ணியாகப் போட்டியிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசிய கட்சிக்கு மக்களாணை கிடையாது. ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் மத்தியில் நல்ல நிலைப்பாடு கிடையாது.

யானை, மொட்டு மற்றும் தொலைபேசி யுடன் கூட்டணியமைக்கப் போவதில்லை. ஏனைய அரசியல் தரப்பினருடன் கூட்டணியமை க்க ஆரம்பக்கட்ட பேச்சுகளை முன்னெடுத்துள் ளோம். இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தீர்மானமிக்கதாக அமையும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தவில்லை. பாதிக்கப்பட்டுள்ள மக்களை மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் வகையில் அரசாங்கத்தின் தீர்மானங்கள் காணப்படுகின் றன. உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் அரசாங்கத்துக்கு தகுந்த பாடம் கற்பிப்பார்கள். – என்றார்

# கடும் பனிப்புயலால் உறைந்த அமெரிக்காவில் 60 பேர் பலி

## 18மணிநேரம் காருக்குள் சிக்கி உயிரிழந்த யுவதி





வாஷிங்டன், டிச.28

ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா, கனடா போன்ற பல்வேறு மேற்கத்திய நாடுகளில் ஆண்டு இறுதியில் குளிர்காலம் உச்சத்தில் இருக்கின்ற நிலையில், பல்வேறு நாடுகளில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகின்றது.

குறிப்பாக, அமெரிக்காவில் கடந்த சில நாள்களாக பனிப்பொழிவு அளவு உச்சத்தை எட்டியுள்ளது. கிறிஸ்மஸ் பண்டிகை, புத்தாண்டு பண்டிகைகளுக்காக விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கடும் பனிப்பொழிவு மக்களின் இயல்பு வாழ்க்கையை முடக்கியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

பனிப்பொழிவுடன் சேர்ந்து பனிப்புயலும் வீசி வருகிறது. இந்தப் பனிப்புயலால் நியூயார்க் மாகாணம் பப்பலோ நகரம் அதிக பாதிப்பை சந்தித்துள்ளது. நியூயார்க்கின் சில பகுதிகளில் நேற்று ஒரேநாளில் 23 செ.மீட்டர் பனி பொழிந்துள்ளது. கடுமையான பனிப்புயலும் வீசி வருவதால் அமெரிக்காவில் மொத்தம் 15 ஆயிரத்திற்கும் அதிகமான விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, பனிப்புயல் மற்றும் பனியால் ஏற்பட்ட விபத்துகள் தொடர்பாக அமெரிக்காவில் இதுவரை 60 பேர் உயிரிழந்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. பனிப்புயல் அதிகரித்து பனிப்பொழிவு அதிகரிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் தேவையான நடவடிக்கைகளை அரசு துரிதப்படுத்தி வருகிறதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், நியூயார்க் மாகாணத்தில் பப்பலோ நகரில் வீசிய பனிப்புயலால் 18 மணி நேரம் காருக்குள் சிக்கிய 22 வயது இளம்பெண் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அண்டெல் டெய்லர் (வயது 22) என்ற இளம்பெண் கடந்த வெள்ளிக்கிழமை மதியம் பணியை முடித்துவிட்டு காரில் வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்த போது, திடீரென பனிப்புயல் வீசியது. இதனால், அவர் காருக்குள் சிக்கிக்கொண்டார்.

நீண்ட நேரம் வீசிய பனிப்புயலால் கார் பனிக்குள் சிக்கிக்கொண்டது.

கடுமையான காற்றுடன் பனிப்புயல் வீசியதால் மணிக்கணக்கில் அவர் காருக்குள் சிக்கிக்கொண்டார். பனிப்புயலில் சிக்கிக்கொண்ட அண்டெல் டெய்லர் காருக்குளேயே உயிரிழந்தார். பனிப்புயலில் சிக்கி 18 மணி நேரத்திற்கு பின் கார் கண்டுபிடிக்கப்பட்டதுடன் குறித்த யுவதி காருக்குள்ளேயே சடலமாக மீட்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.




## உச்சம் தொடுகின்றது கொரோனா அமெ. உதவியை நாடுகின்றது சீனா..!!

பெய்ஜிங், டிச.28

சீனாவில் கொரோனா பாதிப்பு வேகமாக பரவி வருகிறது. சீனாவில் தயாரிக்கப்பட்ட சினோவேக் தடுப்பூசியின் செயல் திறன் குறைவாகவே இருந்தது. ஆனாலும் பிற தடுப்பூசிகளை சீனா செலுத்தவில்லை. ஆனால் தற்போது கொரோனா பரவல் அதிகரித்து இருப்பதால், அந்த நாடு அமெரிக்கத் தடுப்பூசிகள் பக்கம் திரும்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

குறிப்பாகத் தலைநகர் பெய்ஜிங்கில் நிலைமை மோசமாக உள்ளது. இதனால் பெய்ஜிங் விரைவில் சுகாதார மையங்களுக்கு அமெரிவிக்காவின் தயாரிப்பான பைசரின் கொரோனா மருந்தை விநியோகம்செய்ய முடிவுசெய்யப்பட்டுள்ளது. மேலும் கொரோனாவுடன் வாழப் பழக்கிக்கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்ட சீனா கட்டுப்பாடுகளை தளர்த்த தொடங்கியிருக்கிறது.

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் இனி தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டியது இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 8 ஆம் திகதி முதல் புதிய விதி அமுலுக்கு வர உள்ளதுடன் தற்போது வெளிநாடுகளில் இருந்து சீனா வருபவர்கள் 5 நாள்கள் ஹோட்டலிலும் 3 நாள்கள் வீட்டிலும் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற விதி உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.




### ஊழல் வழக்கில் சிறையிலிருந்த

## தெ.கொரிய முன்னாள் அதிபர் பொதுமன்னிப்பில் விடுதலை!

தெ.கொரியா, டிச.28

ஊழல் வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட தென்கொரிய முன்னாள் அதிபருக்கு தற்போதைய அதிபர் யூன் சுக் இயோல் தலைமையிலான அரசு பொது மன்னிப்பு வழங்கி உள்ளதாகக் அறிவித்துள்ளது. தென்கொரியாவில் கடந்த 2008 முதல் 2013 ஆம் ஆண்டு வரை அதிபராக பதவி வகித்த லீ மியூங் தனது பதவி காலத்தின்போது பல்வேறு ஊழல் செய்தார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

பின்னர் அதுதொடர்பான வழக்கு விசாரணையில் அவர் ஊழல் செய்தமை நிரூபணமானமையைத் தொடர்ந்து அவருக்கு கடந்த 202. இல் 17 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து அந்த நாட்டின் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. சிறையில் அடைக்கப்பட்ட பின்னர் அவரது உடல்நிலை மோசமானதால் கடந்த ஜூன் மாதம் அவர் பிணையில் வெளியே வந்தார்.

இந்த நிலையில் முன்னாள் அதிபர் லீ மியூங் பாக்குக்கு தற்போதைய அதிபர் யூன் சுக் இயோல் தலைமையிலான அரசு பொது மன்னிப்பு வழங்கி உள்ளது. இதன் மூலம் அவரது சிறை தண்டனை ரத்து செய்யப்பட்டு வழக்கில் இருந்து விடுவிக்கப் பட்டுள்ளார்.



இவர் தவிர மேலும் 1,372 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டு உள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

## பிலிப்பைன்ஸில் கனமழை, வெள்ளம்; 6 பேர் பலி; 19பேரைக் காணவில்லை

மணிலா, டிச.28

பிலிப்பைன்ஸ் நாட்டின் மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களில் நேற்று முன்தினம் கிறிஸ்துமஸ் தினத்தன்று பலத்த காற்றுடன் கனமழை கொட்டித்தீர்த்தது. இடைவிடாது பெய்த கனமழையால் அங்குள்ள பல நகரங்கள் வெள்ளக்காடாகின.

குடியிருப்புப் பகுதிகளுக்குள் வெள்ளம் புகுந்ததில் நூற்றுக்கணக்கான வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. மேலும் பல வீடுகள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டன. கனமழை, வெள்ளத்தால் மத்திய மற்றும் தெற்கு பிராந்தியங்களில் சுமார் 1 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வெள்ளம் பாதித்த பகுதிகளில் சிக்கிய 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் கனமழை, வெள்ளத்துக்கு இதுவரை 6 பேர் பலியாகினர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் 19 பேர் மாயமாகி உள்ளனர். அவர்களின் கதி என்ன என்பது தெரியவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.



# ஜம்மு எல்லையில் பயங்கரவாதிகளை சுட்டுக் கொன்ற இந்தியப் படையினர்



ஸ்ரீநகர், டிச.28

ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் பாதுகாப்பு படையினர் மற்றும் காஷ்மீர் பொலிஸார் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில், ஜம்முவின் சித்ரா நகரில் புறப்பட்ட லொறியொன்று காஷ்மீர் நோக்கி சென்றுகொண்டிருந்தது.

ஜம்முவின் தவி நகர் பாலத்தில் இன்று காலை 7.30 மணியளவில் வந்த லொறியை மறித்து பாதுகாப்புப் படையினர் சோதனை செய்தபோது, லொறிக்குள் பதுங்கி இருந்த பயங்கரவாதிகள் திடீரென பாதுகாப்பு படையினர் நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்திவிட்டுத் தப்பியோட முயற்சித்தனர்.

இதையடுத்து, லொறியைச் சுற்றி வளைத்த பாதுகாப்பு படையினர் பதில் தாக்குதல் நடத்தியமையுடன், இரு தரப்புக்கும் இடையே சில மணி நேரம் துப்பாக்கிச்சண்டை நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. இந்த மோதலில் பாதுகாப்பு படையினர் நடத்திய பதிலடி தாக்குதலில் 3 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. லொறியை செலுத்திய சாரதி தப்பியோடிய நிலையில், அவரைத் தேடும் பணியை பாதுகாப்பு படையினர் துரிதப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# மண்டல நிறைவையொட்டி சபரிமலை ஐயப்பனுக்கு தங்க அங்கி அணிவிப்பு



சபரிமலை, டிச.28

சபரிமலையில் ஐயப்பனுக்கு 41 நாள்கள் நடைபெற்ற சிறப்பு பூஜைகளுக்கு பின் நேற்றையதினம் தங்க அங்கி அணிவித்து மண்டலபூஜை நடந்தது. பூஜை மற்றும் வழிபாடுகளில் ஆயிரக்கணக் கான பக்தர்கள் கலந்து கொண்டு சரண கோத்துடன் சாமி தரிசனம் செய்தனர்

மண்டல, மகரவிளக்கு சீசனை முன்னிட்டு கடந்த மாதம் 16 ஆம் திகதி சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறக்கப்பட்டது. அன்றைய தினம் முதல் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதிக்கப்பட்டனர். இதையொட்டி தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, புதுச்சேரி உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து ஐயப்பனைத் தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், சபரிமலை கோவில் நடை திறந்து ஒரு மண்டலம் (41 நாள்கள்) நிறைவடைந்ததையொட்டி நேற்று ஐயப்பனுக்கு தங்க அங்கி அணிவித்து மண்டல பூஜை நடந்தது. இதையொட்டி ஐயப்பனுக்கு அணிவிக்கப்படும் தங்க அங்கி ஊர்வலம் கடந்த 23 ஆம் திகதி ஆரன்முளா பார்த்தசாரதி கோவிலில் இருந்து புறப்பட்டு நேற்று முன்தினம் மாலை சன்னிதானத்தை வந்தடைந்தது.

அதைத்தொடர்ந்து 18 ஆம் படி வழியாக எடுத்து செல்லப்பட்டு ஐயப்பனுக்கு தங்க அங்கி அணிவித்து சிறப்பு அலங்கார தீபாராதனை நடந்தது. பின்னர் வழக்கமான பூஜைகளுடன் இரவு 11.30 மணிக்கு கோவில் நடை அடைக்கப்பட்டது. இந்த நிலையில் மகர விளக்கு பூஜைக்காக நாளை மறுதினம் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கோவில் நடை மீண்டும் திறக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்டல பூஜையையொட்டி நேற்று சபரிமலையில் கூடுதல் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# மூக்கு வழியாக செலுத்தும் கொரோனா தடுப்பு மருந்து அடுத்த மாதம் அறிமுகம்









புதுடெல்லி, டிச.28

கொரோனா தோன்றிய சீனா உள்ளிட்ட பல நாடுகளில் உருமாறிய புதுவகை கொரோனா (பி.எவ்.7) அலை உருவாகியுள்ளதுடன், இந்தியாவில் தற்போது தொற்று கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், உலகின் முதல் மூக்குவழி கொரோனா தடுப்பு மருந்து இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் கொரோனாவை கட்டுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றிய தடுப்பூசிகளில் ஒன்றான கோவேக்சினை தயாரித்து வழங்கும் ஐதராபாத் பாரத் பயோடெக் நிறுவனத்தார், அமெரிக்காவின் விஷிங்டன் பல்கலைக்கழகத்துடன் கூட்டு சேர்ந்து 'பிபிவி154' என்ற பெயரில் மூக்கு வழியே செலுத்துகிற கொரோனா தடுப்பு மருந்தை உருவாக்கி உள்ளனர்.

இந்த மூக்கு வழி தடுப்பு மருந்து, 'இன்கோவாக்' என்ற வணிகப்பெயருடன் சந்தைக்கு வருகிறது. இந்த தடுப்பு மருந்துக்கான அவசரகால பயன்பாட்டு அனுமதியை கடந்த நவம்பர் மாதம் இந்திய தலைமை மருந்து கட்டுப்பாட்டு இயக்குனரகம் வழங்கியது. அதைத் தொடர்ந்து இந்த தடுப்பு மருந்தை 18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு பூஸ்டர் டோஸ் தடுப்பூசியாக (முன்எச்சரிக்கை டோஸ்) வழங்குவதற்கு கடந்த 23ஆம் திகதி மத்திய அரசு அனுமதி வழங்கியது. இந்தத் தடுப்பு மருந்து 3 கட்ட மருத்துவ பரிசோதனைகளில் சோதிக்கப்பட்டு, வெற்றி காணப்பட்டுள்ளதுடன், இது பாதுகாப்பானது எனவும் தெரிய வந்துள்ளது.

தனியார் வைத்தியசாலைகளுக்கான இந்த தடுப்பு மருந்து ஒரு 'டோஸ்' விலை இந்திய மதிப்பில் ரூபா.800 ஆகும். அதே நேரத்தில் மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் இந்த தடுப்பு மருந்து ரூ.325 என்ற விலையில் விநியோகம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தடுப்பு மருந்து, பூஸ்டர் டோஸ் தடுப்பு மருந்தாக விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்று பாரத் பயோடெக் நிறுவனத்தார் அறிவித்துள்ளனர்.

இந்த தடுப்பு மருந்து எளிய முறையில் இருப்பு வைத்துக்கொள்ளலாம், விநியோகிக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக பாரத் பயோடெக் நிறுவனத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதில் இந்த தடுப்பு மருந்து ஜனவரி மாதம் 4 ஆவது வாரத்தில் பயன்பாட்டுக்கு வந்து விடும் என தெரிவித்துள்ளனர். இந்த தடுப்பு மருந்தின் 3 ஆவது கட்ட பரிசோதனையின்போது,

இந்தியா முழுவதும் 14 இடங்களில் 3,100 பேருக்கு கொடுத்து அதன் நோய் எதிர்ப்புச்சக்தியும், பாதுகாப்பும் சோதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூன்று நாள்களில் இந்தியா வந்த 3.9 பேருக்கு கொரோனா உறுதி



புதுடெல்லி, டிச.28

சீனா உள்பட பல்வேறு நாடுகளில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரித்துள்ளதை அடுத்து, கடந்த 24ஆம் திகதி முதல் இந்தியாவில் உள்ள விமான நிலையங்களுக்கு வரும் சர்வதேச பயணிகளிடம் கொரோனாப் பரிசோதனை நடத்தப்பட்டது.

அதன்படி டிசம்பர் 24,25 மற்றும் 26 ந் திகதிகளில் 498 விமானங்களில் வந்த பயணிகளிடம் கொரோனா சோதனை மேற்கொள்ளப்பட்டன. அதன்படி மொத்தம் 1,780 மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இந்த பரிசோதனை முடிவில் 39 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் அவர்களுக்கு பி.எவ்.7 ரக கொரோனா பாதிப்பு இருக்கிறதா என்பதை கண்டறிய மரபணு சோதனைமுறை நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# காரைதீவில் சிறப்பாக ஆரம்பமாகிய அதிகாலை திருவெம்பாவை ஊர்வலம்





(வி.ரி. சகாதேவராஜா)

இந்துக்களின் திருப்பள்ளிஎழுச்சி, திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வலம் இன்று புதன்கிழமை அதி காலை கோலாகலமாக ஆரம்பமாகியது.

காரைதீவு இந்து சமயவிருத்திச்சங்கம் வருடாவருடம் நடாத்திவரும் திருப்பள்ளி எழுச்சி ஊர்வலமும் இன்று அதிகாலை 4.00 மணியளவில் ஸ்ரீ கண்ணகை அம் மன் ஆலயத்தில் இருந்து விசேட பூஜையுடன் ஆரம்ப மாகியது. வீதி ஊர்வலம் அதிகாலை 5.30 மணியளவில் பூர்த்தியுற்று, கண்ணகை அம்மன் ஆலயத்தில் தி ருவெம்பாவை பூஜையுடன் வழிபாடு நிறைவுற்றது.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் பூஜையை நடத்தி சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்.

தொடர்ந்து திருவாசக முற்றோதல் நடைபெற்றது.

நாளை வியாழக்கிழமை அதிகாலை திருவெம்பாவை ஊர்வலமானது மாவடி கந்தசுவாமி ஆலயத்தை சென்றடையவிருக்கிறது.

சிவனை நினைந்து வழிபடும் இவ்விரதம் இன்று புதன்கிழமை அதிகாலை ஆரம்பமாகியது.தொடர்ந்து 10தினங்கள் திருவெம்பாவை விரதம் மற்றும் ஊர்வல நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இறுதியில் பத்தாம் நாள் 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருவாதிரை தீர்த்தோற்சவத்துடன் திருவெம்பாவை நோன்பு நிறைவடைகிறது.

இக்காலகட்டத்தில் பிரம்ம முகூர்த்த வேளையாம் அதிகாலை 4 முதல் 6 மணி வேளையில் ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதுடன், இவ் ஊர்வலத்திலும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் அருளைப் பெறுவது இந்துக்களின் வழமையான செயற்பாடாகும்.

## ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்த நபருக்கு சிறைத்தண்டனை விதிப்பு




(வி.ரி. சகாதேவராஜா)

ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த சம்பவத்தில் குற்றவாளியான நபர் ஒருவருக்கு அக்கரைப்பற்று நீதவான் எம்.எச்.எம்.ஹம்சா சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் .

அட்டாளைச்சேனையைச் சேர்ந்த 70 வயதுடையவர் 9 கிராமும் 850 மில்லி கிராமும் ஐஸ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த 3 மாதங்களாக விளக்க மறியலில் வைக் கப்பட்டிருந்தார் ,

அவரது அடையாள மற்றும் தண்டனைத் தீர்ப்புக்காக நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டிருந்தார். இதன் போது இவருக்கு ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது

முதல் 6 மாத கடுழிய சிறைத் தண்டனையும், மிகுதி 6 மாத காலச் சிறைத் தண்டனை7 வருட காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளதுடன் பத்தாயிரம் ருபா தண்டப் பணமும் விதிக்கப்பட்டுள்ளது.

## சுனாமி ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்த சம்மாந்துறை மையவாடியை சீரமையுங்கள்!

### பொதுமக்கள் தரப்பில் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர்)

கடந்த சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு மரணித்த அம்பாறை மாவட்ட கரையோர பிரதேச முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்துள்ள சம்மாந்துறை காட்டுப்பள்ளி மை யவாடி அமைந்துள்ள இடம் புற்கள் வளர்ந்து பற்றைக்காடாக மாறியிருப்பதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த 26 ஆம் திகதி சுனாமி தாக்கத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவை அனுஷ்டித்த மக்கள் குறித்த மையவாடிக்கு சென்று அங்கு நல்லடக்கம் செய்துள்ளஉறவினர்களுக்காகதுஆபிரார்த்தனையில் ஈடுபட்டனர். சுனாமி அலையில் அள்ளுண்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு ஒன்றரை ஆண்டுகளுக்கு மேலாக அடைக்கலம் கொடுத்த சம்மாந்துறை மக்கள், மரணித்த சகோதரர்களின் உடல்களையும் சம்மாந்துறையின் பல மை யவாடிகளில் நல்லடக்கம் செய்ய வாய்ப்பளித்தனர். மரணித்த சகோதர்களை கௌரவிக்கும் விதமாக அந்தப் பிரதேசத்தை வேலியமைத்து குறித்த பள்ளிவாசல் நிர்வாகமும், சம்மாந்துறை மக்களும் பாதுகாத்து வருகின்றனர். இருந்தாலும் இந்த மையவாடியில் இன்றைய நிலை கவலையளிக்கும் நிலையாக மாறியிருக்கிறது.

இந்த மையவாடியை சிரமதானம் செய்து அந்த மையவாடிக்கான பெயர்பலகையை பொருத்த அம்பாறைமாவட்டத்தில்உள்ளசிவில்அமைப்புக்கள், அரசியல் தலைவர்கள், உள்ளூராட்சி மன்றங்கள் முன்வரவேண்டும் என மக்களின் எதிர்பார்ப்பாக அமைந்துள்ளது.




# மூதூர் பிரதேச கலை இலக்கிய விழாவும் கலைஞர் கௌரவிப்பும் சம்பூரில் நேற்று





(இரா.ரஜீந்திரமூர்த்தி)

மூதூர் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நேற்று இவ்வாண்டுக்கான பிரதேச கலை, இலக்கிய விழாவும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும் பிரதேச செயலாளர் எம்.பி.எம். முபாரக் தலைமையில் சம்பூர் கலாசார ம ண்டபத்தில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம, கௌரவ அதிதிகளாக பேராசிரியர் பாலசுகுமார், மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.அரூஸ், போதுச்சேவை ஆணைக்குழு செயலாளர் எம்.கோபலரத்தினம், வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ், மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட பலரும் கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் பிரதேச செயலக கலை இலக்கிய மலர் 'முத்து – மலர் 4' வெளியீட்டு வைக்கப்பட்டமையுடன் மூதூர் பிரதேசத்தை சார்ந்த 41 கலைஞர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். கலை கலாசார நிகழ்வுகளும் சிறப்புற இடம்பெற்றன.

# ஐ.எஸ்.ஓ. தரத்துடன் கூடிய விவசாய ஆய்வுகூட ஒப்பந்தம்! நேற்று கைச்சாத்திடப்பட்டது



கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனமும் கிழக்கு மாகாண சபையும் இணைந்து நேற்று (செவ்வாய்க் கிழமை) கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நாட்டிலேயே முதன் முறையாக ஐ.எஸ்.ஓ. தரத்துடன் கூடிய விவசாய தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

திருகோணமலையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

ஆளுநரால் செயல்படுத்தப்பட்ட'நிலையான விவசாயம்' என்ற திட்டத்துடன் இணைந்து இந்த புதிய ஆய்வகம் கட்டப்பட்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தத்தில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ். ரத்நாயக்க மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் ஜே.கே.ஆர்.ராதிகா சமரசேகர ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த புதிய ஆய்வகத்தின் மூலம் இயற்கை உரங்கள் மற்றும் இடுபொருள்கள், விதைகள் மற்றும் நடவு பொருள்கள், விவசாய உணவு மற்றும் மண் மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு அந்த சான்றிதழ்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மதிப்பு வழங்கப்படுவதும் விசேடமாகும்.

தற்போது, நாட்டில் மஹஇலுப்பல்லம மற்றும் கன்னொறுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனங்களில் 2 ஆய்வகங்கள் உள்ளன மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் தலைமையீட்டுடன், அனைத்து வசதிகளுடன் முழுமையான ஐ.எஸ.ஓ. தரநிலைகளுடன் அத்தகைய ஆய்வு கூடம் இல்லை.

இதற்கிடையில், இயற்கை விவசாயப் பொருள்களுக்கான ஆய்வகத்தின் சான்றிதழைக் கொண்டிருப்பது உலகில் மிக உயர்ந்த மதிப்பைக் கொண்டிருக்கும், மேலும் இது சர்வதேச சந்தையை வெல்வதை எளிதாக்கும்.

உத்தேச புதிய ஆய்வுகூடத்தை நிர்மாணிப்பதன் மூலம் விவசாய பயிர்கள் அதிகளவில் பயிரிடப்படும் வட மத்திய மற்றும் வடமாகாண விவசாயிகளும் அதிக தூரம் பயணிக்காமல் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்பது சிறப்பு.

இன்று நாட்டில் டொலர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால், விவசாயிகள் தமது உற்பத்திப் பொருள்களை சர்வதேச சந்தைக்கு அனுப்பி, இதிலிருந்து பெறப்பட்ட பெறுமதியான தரச் சான்றிதழ் மூலம் நாட்டுக்கு டொலர்களைக் கொண்டுவர முடியும் என ஆளுநர் தெரிவித்தார்.

கடன் சுமையை அதிகரிக்க தொடர்ந்து டொலர்களை கடனாகப் பெறுவதா அல்லது இவ்வாறான முறைகள் மூலம் எமது பொருள்களை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பி டொலர் தட்டுப்பாட்டை எதிர்நோக்குவோமா என்பதை இப்போது சிந்திக்க வேண்டும். எங்கள் தயாரிப்புகள் சர்வதேச சந்தைக்கு சென்றால், எங்களுக்கு நல்ல தர சான்றிதழ் கிடைக்கும். அதனால்தான் இந்த ஆய்வகத்தை உருவாக்குகிறோம். நமது நாட்டில் விவசாயத் தொழில்நுட்பம் போதிய அளவில் இல்லை.

எங்கள் தயாரிப்புகள் சர்வதேச சந்தைக்கு சென்றால், எங்களுக்கு நல்ல தர சான்றிதழ் தேவை. அதனால்தான் இந்த ஆய்வகத்தை உருவாக்குகிறோம். நமது நாட்டில் விவசாயத் தொழில்நுட்பம் போதிய அளவில் இல்லை. அதனால்தான் நமது தயாரிப்புகள் வெளிநாட்டு சந்தைகளுக்கு செல்கின்றன. நாம் என்ன சொன்னாலும் யூரியா இல்லாமல் வேலை செய்ய முடியாது என்று சொல்லும் விவசாயிகள் இன்னும் இருக்கிறார்கள்.

அவர்கள் செய்வது நம் குழந்தைகளை நோய்வாய்ப்படுத்துகிறது. சுற்றுச்சூழலை மாசுபடுத்துகிறது. இல்லையெனில், நாங்கள் வேலை செய்ய வேண்டும்.

எதிர்காலத்தில், புதிய ஆய்வகத்துக்காக சீனாவின் யுன்ஹான் மாகாணத்தில் உள்ள ஒரு விவசாயப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க நாங்கள் பணியாற்றி வருகிறோம். எத்தகைய மாற்றங்கள் வந்தாலும் இதனை முன்னெடுத்துச் செல்வதற்கு முதுகெலும்பும் ஆர்வமும் இருக்க வேண்டும் என்றும் ஆளுநர் கூறினார்.

இதன்போது, மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஐ.கே.ஜி. முத்துபண்டா, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, திருகோணமலை மாவட்ட செயலாளர் பி.எச்.என்.ஜெயவிக்ரம, திருகோணமலை மாவட்ட விவசாயிகள் அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# ஐஸ் போதைப்பொருளுடன் வவுனியாவில் இளைஞர் கைது!

வவுனியாவில் ஐஸ் போதைப்பொருளுடன் நேற்று (செவ்வாய்க் கிழமை) இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, வவுனியா உக்குளாங்குளம் பகுதியில் விசேட நடவடிக்கை ஒன்றை பொலிஸார் முன்னெடுத்திருந்தனர். இதன்போது மோட்டர் சைக்கிள் ஒன்றில் ஐஸ் போதைப் பொருளுடன் சென்ற ஒருவர் பொலிஸாரால் மடக்கிப் பிடிக்கப்பட்டதுடன், அவரிடம் இருந்து ஐந்தாக பொதி செய்யப்பட்ட நிலையில் 20 கிராம் ஐஸ் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

இதனையடுத்து குறித்த மோட்டர் சைக்கிளுடன் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் , அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# லொறி – ஓட்டோ மோதி விபத்து: இருவர் பலி ; இருவருக்கு காயம்!





பாதெனிய – அநுராதபுரம் பிரதான வீதியில் தம்புத்தேகம கொன்வெள பிரதேசத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) மாலை இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என தம்புத்தேகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

கல்கமுவ, மஹகல்கடவல பிரதேசத்தை சேர்ந்த 21 வயதான நபரும் கல்கமுவ, களுந்தேவ பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய ஒருவருமே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த லொறியொன்றும் தலாவயிலிருந்து தம்புத்தேகம நோக்கி பயணித்த ஓட்டோவும் தம்புத்தேகம கொன்வெள பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்து வந்த ஊழியர்கள் நால்வர் தமது பணியை முடித்துக் கொண்டு ஓட்டோவில் பயணித்துக் கொண்டிருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பௌத்த பல்கலைக் கழகத்தை மூட முயற்சி எதிர்ப்பு தெரிவித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம்!







பிட்டிபனவிலுள்ள பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தை மூடுவதற்கு அரசாங்கம் மறைமுகமாக நடவடிக்கை எடுத்து வருவதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று (செவ்வாய்க்கிழமை) பத்தரமுல்லை, இசுறுபாயவிலுள்ள கல்வி அமைச்சுக்கு முன்னால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

## புதிய அமைச்சர்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றின் அரசியல் பக்கத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

10 அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், சில இராஜாங்க அமைச்சர்களும் நியமிக்கப்படவுள் ளனர். இந்த நியமனம் இழுபறியில் செல்கின்றது.

இந்த இழுபறி காரணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான எதிர்ப்பு மொட்டுக் கட்சிக்குள் இருந்துகொண்டேதான் இருக்கின்றது.

அமைச்சுப் பதவி கேட்டு ரணில் விக்கிரமசிங்கவிடம் பஸில் ராஜபக்ஷ பல மாதங்களுக்கு முன் 12 பேர் அடங்கிய பெயர்ப்பட்டியல் ஒன்றை வழங்கி இருந்தார். பஸில் பல தடவைகள் கோரிக்கை விடுத்தும் கொஞ்சம்கூட அசையவில்லை ஜனாதிபதி ரணில்.

அதற்குக் காரணம் அந்தப் பட்டியலில் இருந்த நால்வர்தான். நாமல் ராஜபக்ஷ, மஹிந்தானந்த அளுத்கமகே, ஜோன்சன் பெர்னாண்டோ, ரோஹித அபேகுணவர்தன ஆகிய நால்வரே அவர்கள்.

மக்கள் மத்தியிலும் மொட்டு எம்.பிக்கள் மத்தியிலும் இவர்களுக்கு எதிர்ப்பு இருப்பதால் இவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்க முடியாது என்று ரணில் உறுதியாகக் கூறிவிட்டார்.

சஜித் அணியில் இருந்து அரசில் இணையப் போகின்றவர்களும் அவர்கள் அமைச்சர்களாவதை விரும்பவில்லை.

மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச வையும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவையும் அழைத்து நிலைமையை ஜனாதிபதி விளக்கிக் கூறினார். அதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர். வேறு பெயர்ப்பட்டியலைத் தருகின்றேன் என்று மஹிந்த கூறியிருந்தார்.

வரவு - செலவுத் திட்டத்தைத் துருப்புச் சீட்டாகாக் கொண்டு தமது கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அமைச்சுப் பதவிகளைக் கைப்பற்றுவதற்கு அவர்கள் முயற்சி செய்தனர். சில அமைச்சுக்களின் நிதி ஒதுக்கீட்டைத் தோற்கடித்து ரணிலைப் பணிய வைப்ப தற்கு முயற்சித்தனர். அது முடியவில்லை.

ரணிலோ இந்த விடயத்தில் மிகவும் அமைதியாக இருந்தார். காரணம் அவர்களை வழிக்குக் கொண்டு வருவதற்கு அவரிடம் ஓர் ஆயுதம் இருந்தது. அதனால் ரணில் அசால்டாக நடந்துகொண்டார்.

இந்த விடயம் பற்றி - அந்த எம்.பிக்களின் எதிர்ப்பு பற்றி பஸிலிடம் கூறினார் ரணில்.

வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் எனக்கு எந்த நட்டமும் இல்லை. மொட்டுக் கட்சி எம்.பிக் களுக்குத்தான் நட்டம். வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டால் நாடாளுமன்றத்தைக் கலைக்க நேரிடும். அப்படிக் கலைத்தால் நாடு இப்போது இருக்கும் நிலையில் அதிகமான எம்.பிக்கள் தோல் வியடைவார்கள். நட்டம் உங்களுக்கே அன்றி எனக்கில் லை. அமைச்சுப் பதவிக்கு ஆசைப்பட்டு இறுதியில் எம்.பி. பதவியையும் இழக்கப்போகிறீர்கள் என்றார் ரணில்.

அதனால் சற்று ஆடிப்போனார் பஸில். உண்மைதான். இது தேவையில்லாத சண்டை. மீண் டும் கட்சிக்குள் பிளவையும் வீழ்ச்சியையுமே தரும் என்று உணர்ந்த பஸில் அந்த விவகாரத்தை அப்படியே ஜனாதிபதியின் விருப்பத்துக்கே விட்டுவிட்டார்.

இந்நிலையில், அமைச்சரவை நியமனம் இன்னும் காலம் தாழ்த்தப்படும் என்று அறியமுடிகின்றது. அதாவது, ஜனவரி 15ஆம் திகதி வரை சாத்தியமில்லை என்றுஜனாதிபதிவட்டாரத்தில்இருந்துஅறியமுடிகின்றது - என்றுள்ளது.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.12.2022 இல் வெளியிடப்பெற்றது.